கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் அவர்களின் மைத்துனரும், அவரது தங்கையின் கணவருமான, சி.அருண்குமார் அவர்களின் மறைவையொட்டி, அவரது புகழ் உடலுக்கு, தமிழ்நாடு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மற்றும் சேலம் கிழக்கு மாவட்ட கழக செயலாளர், மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் ஆகியோர் மாலை அணிவித்து, அஞ்சலி செலுத்தி, அன்னாரைப் பிரிந்து வாடும் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கு ஆறுதல் கூறினார்கள்.

திண்டுக்கல் மாவட்டத்தில் இதுவரை 4 லட்சம் மகளிருக்கு உரிமைத் தொகை!

அமைச்சர் ஐ.பெரியசாமி தகவல்!

திண்டுக்கல்,ஆக.14- திண்டுக்கல் மாவட்டத்தில்; இதுவரை 4 லட்சம் மகளிருக்கு உரிமைத் தொகை வழங்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் ஐ.பெரியசாமி தெரிவித்தார்.

‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம் தமிழகத்தில் மகளிருக்கு உரிமைத்தொகை வழங்குவதோடு கலைஞரின் மருத்துவக்காப்பீட்டு அட்டை திட்டம் மூலம் அவர்களை பாதுகாக்கிறது என்று குட்டத்துப்பட்டியில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ சிறப்பு முகாமில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதோடு மகளிர் உரிமைத்தொகைக்காக கோரிக்கை மனு கொடுக்கும் பெண்கள் தவறாமல் கலைஞரின் மருத்துவக் காப்பீட்டு திட்டத்தில் பதிவு செய்ய வேண்டும் என அமைச்சர் ஐ.பெரியசாமி வேண்டுகோள் விடுத்தார்.

திண்டுக்கல் மாவட்டம் குட்டத்துப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்டம் சிறப்பு முகாம் குட்டத்து ஆவரம்பட்டி பள்ளியில் நடைபெற்றது. முகாமிற்கு திண்டுக்கல் கோட்டாட்சியர் சக்திவேல் தலைமை தாங்கினார். கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் குருமூர்த்தி, கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் சத்தியமூர்த்தி, ரெட்டியார் சத்திரம் தெற்கு ஒன்றிய செயலாளர் எம். இன்பராஜ், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வட்டாட்சியர் ஜெயப்பிரகாஷ் வரவேற்று பேசினார்.

முகாமில் பொது மக்களிடமிருந்து மனுக்கள் பெறும் இடங்களை பார்வையிட்ட பின்பு பொது மக்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள்; திண்டுக்கல் மாவட்டத்தில்; இதுவரை 4 லட்சம் மகளிருக்கு உரிமை தொகை வழங்கப்பட்டுள்ளது. இதுதவிர தமிழகம் முழுவதும் 1 கோடியே 60 லட்சம் பேரிடம் மனுக்கள் பெறப்பட்டு 1 கோடியே 16 லட்சம் பேருக்கு உரிமை தொகை வழங்கப்பட்டுஉள்ளது. விடுபட்டவர்க ளுக்கு மகளிர் உரிமை தொகை வழங்கத்தான் இந்த முகாமில் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு வருகிறது.

குறிப்பாக கடந்த தி.மு.க. ஆட்சியின் போது வழங்கிய முதியோர் உதவித் தொகையை அ.தி.மு.க. ஆட்சியில் நிறுத்தி விட்டனர். இப்போது நீங்கள் மீண்டும் முதியோர் உதவித்தொகை வேண்டி மனு கொடுத்தால் உடனடியாக ஒரு மாதகாலத்தில் உங்களுக்கு முதியோர் உதவித்தொகை கிடைக்கும் என்றார். ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாமிற்கு வரும் பெண்கள் மகளிர் உரிமைத்தொகைக்கு மட்டும் மனு கொடுத்து விட்டு சென்று விடுகின்றனர். இனி நீங்கள் மகளிர் உரிமைத் தொகைக்காக விண்ணப்பம் கொடுத்தவர்கள் கலைஞர் மருத்துவக்காப்பீட்டு திட்டத்தில் சேர்ந்த அந்த காப்பீட்டு திட்ட அட்டையை பெற்றுக் கொள்ள வேண்டும் என்றார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த மருத்துவ காப்பீட்டு திட்டம் ஆத்தூர் தொகுதியில் மட்டும் நூற்றுக் கணக்கான பேரை காப்பாற்றி வருகிறது. குறைந்தது 5 லட்சம் முதல் 30 லட்சம் வரையிலான மருத்துவ வசதிகளை இந்த திட்டம் மூலம் பெறலாம் என்றார்.

ஆத்தூர் தொகுதியில் கடந்த வருடம் 2 ஆயிரம் கலைஞரின் கனவு இல்ல வீடுகளுக்கு ஆணை வழங்கப்பட்டு பயனாளிகள் அனைவரும் புதுவீட்டிற்கு சென்று விட்டனர். இந்த வருடம் 1500 பேருக்கு கலைஞரின் கனவு இல்ல திட்டம் மூலம் வீடுகள் கட்டுவதற்கான வழங்கப்பட்டு உள்ளது. குட்டத்துப்பட்டி ஊராட்சிக்கு மட்டும் 108 வீடுகள் வழங்கப்பட்டுள்ளது என்றவுடன் பொதுமக்கள் மகிழ்ச்சியில் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

அதன் பின்னர் அமைச்சர் ஐ.பெரியசாமிஅவர்கள் தமிழகத்தில் மக்களுக்கான மக்கள் நலனுக்கான ஆட்சி திராவிடமாடல் ஆட்சி நாயகர் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது. நீங்கள் கொடுக்கும் ஒவ்வொரு மனுவும் அவரின் பார்வைக்கு சென்று வருவதால் ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம் உங்கள் இல்லம் தேடி வந்து தமிழக முதல்வரே நேரில் வந்து மனுக்களை பெறுவது போல் செயல்பட்டு வருகிறது. அவருக்கு நாம் என்றும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் குட்டத்துப்பட்டி பங்குத்தந்தை சௌந்தரம், அருட்சகோதரி விக்டோரியா, வட்டார வளர்ச்சி அலுவலர் மலரவன், கண்ணன், ரெட்டியார் சத்திரம் தெற்கு ஒன்றிய திமுக துணை செயலாளர் சுமதி கணேசன், மாவட்டதகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர்கள், பாறைப்பட்டி வாஞ்சிநாதன், கணேசன் மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் விவேகானந்தன், கதிரையன்குளம் பாலன், மாவட்ட பிரதிநிதி இளங்கோ பிரிட்டோ, பொதுக்குழு உறுப்பினர் டென்னி, உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

நெல்லை மாநகராட்சி மன்றக் கூட்டம்! மேயர் கே.ராமகிருஷ்ணன் தலைமை!

ஆணையர் மரு.மோனிகா ராணா – துணை மேயர் கே.ஆர்.ராஜு முன்னிலை!

நெல்லை.ஆக.14-- நெல்லை மாநகராட்சி மைய அலுவலக இராஜாஜி மண்டபத்தில் மாமன்ற கூட்டம் மேயர் கோ.ராமகிருஷ்ணன் தலைமையில் மாநகராட்சி ஆணையாளர் மரு.மோனிகா ராணா, துணை மேயர் கே.ஆர்.ராஜு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மேயர் கோ.ராமகிருஷ்ணன் பேசியதாவது.

திருநெல்வேலி மாநகராட்சி மேயராக நான் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவு பெற்றுள்ளது. இந்த ஓராண்டில் பல திட்டங்களுக்கு இம்மாமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைப்புடன் அனுமதி வழங்கி நல்ல பணிகள் செய்யப்பட்டுள் ளது.அதற்கு காரணமாக விளங்கி வரும் மாநகராட்சிக்கு நல்ல பல திட்டங்களை செயல்படுத்தி தந்து கொண்டிருக்கும் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களுக்கும்,துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே.என்.நேரு, நாடாளுமன்ற உறுப்பினரும் மண்டல பொறுப்பாளரு மான கனிமொழி கருணாநிதி அவர்களுக்கும்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு. அப்துல்வஹாப் ஆகியோருக்கும் இம்மாமன்றத்தின் சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்த திராவிட மாடல் ஆட்சியில் 2024-2025 ஆம் ஆண்டில் நான் மேயராக பதவியேற்ற காலத்தில் திருநெல்வேலி மாநகராட்சி இந்தியாவிலேயே வாழத் தகுதியுள்ள தூய்மை மாநகரமாக தரச் சான்று வழங்கி தேர்வு செய்யப்பட்டுள் ளது.அதன் பொருட்டு எனக்கு கடந்த ஆண்டில் முழு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் மீண்டும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாநகராட்சி மக்களுக்கு நல்ல பல திட்ட பணிகளை சிறப்பாக செய்து வந்த முன்னாள் ஆணையாளர் மரு.என்.ஓ. சுகபுத்ரா,தற்போது பல நல்ல திட்டப் பணிகளை செய்து வருகின்ற ஆணையாளர் மரு.மோனிகா ராணா மற்றும் துணை ஆணையாளர், கண்காணிப்பு பொறியாளர்,உதவி ஆணையாளர் நிர்வாகம், கணக்கு மற்றும் நான்கு

மண்டல உதவி ஆணையாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள், உதவி நகர திட்டமிடுனர், மாநகர் நல அலுவலர், நிர்வாக அலுவலர்கள், அனைத்து பணியாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கும், ஊடக நண்பர் களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இத்தருணத்தில் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் இம்மாநகராட்சி மக்களுக்கு பல நல்ல திட்டங்களை செயல்படுத்திடவும், தமிழ் நாட்டில் மிகச்சிறந்த மாநகராட்சியாக தேர்வு செய்யும் பொருட்டு அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து அலுவலர்களும் எனக்கு ஒத்துழைப்பு வழங்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

அதனைத் தொடர்ந்து மேயராக பொறுப்பேற்று கடந்த ஓராண்டு காலத்தில் மாநகராட்சி நான்கு மண்டல பகுதிகளில் உள்ள 55 வார்டுகளிலும் மிகச் சிறப்பாக மக்கள் பணியாற்றியதை பாராட்டு வகையில் மேயர்க்கு மாமன்ற உறுப்பினர்கள் தங்களது வாழ்த்துக் களையும்,நன்றியையும் தெரிவித்தனர்.

நிகழ்வில் மண்டல தலைவர்கள் பிரான்சிஸ் (பாளை) ரேவதி (தச்சை) கதிஜா இக்லாம் பாசிலா (மேலப்பாளையம்) மகேஸ்வரி (நெல்லை) நிலைப்குழு தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், துணை ஆணையர் கிருஷ்ண மூர்த்தி, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தமிழக அரசின் 7.5 சதவீத இட ஒதுக்கீட்டில் மருத்துவக் கல்லூரிக்கு தேர்வாகியுள்ள மாணவி மோகனப்பிரியா ஆண்டிபட்டி அருகே உள்ள ரோசனப்பட்டி பகுதியில் உள்ள அவரது வீட்டிற்கு ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் *மகாராஜன் நேரடியாக சென்று வாழ்த்துக்களை தெரிவித்து படிப்பு செலவிற்காக ரூ.25 ஆயிரம் நிதி உதவி வழங்கினார். உடன் கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதல்வர் மு. க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் ”முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை பயனாளிகளுக்கு ரேசன் பொருட்களை வழங்கி தொடங்கி வைத்ததை தொடர்ந்து தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் மதுரை சுப்பிரமணியபுரத்தில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று குடிமை பொருட்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார், மாநகராட்சி ஆணையாளர் சித்ராவிஜயன் ஆகியோர் உடன் உள்ளனர்.

தமிழக முதல்வர் திட்டங்களை உலகமே வியந்து பாராட்டுகிறது!

அமைச்சர் கே ஆர்.பெரிய கருப்பன் பேச்சு!

சிவகங்கை .ஆகஸ்ட் 14– சிவகங்கை மாவட்டம் சிவகங்கை தாலுகா ஒக்கூர் புதூரில் நேற்று தமிழக முதல்வரால் மூத்த குடிமக்களுக்கு உணவு பொருட்களை வீட்டில் கொண்டு சேர்க்கும் திட்டமான தாயுமானவர் திட்டம் சிவகங்கை மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. மாவட்ட ஆட்சியர் திருமதி கா.பொற்கொடி தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது. மண்டல கூட்டுறவு இணைப்பதிவாளர் ராஜேந்திர பிரசாத் வரவேற்று பேசினார். கூட்டத்தில் கலந்து கொண்டு இத்திட்டத்தை துவக்கி வைத்து கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசியதாவது.

தமிழக முதல்வர் பதவி ஏற்ற நாள் முதல் தினசரி பல புதிய திட்டங்களை அறிவித்து வருகிறார். இந்த திட்டங்களுக்குஅரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மக்களுக்கு மனிதநேயத்துடன் உதவும் வகையில் மனித நேய முதல்வராக மக்கள் பணியாற்றி வருகிறார். இன்று திட்டங்களுக்கெல்லாம் முத்தாய்ப்பான திட்டமாக தாயுமானவர் திட்டம் துவக்கப்படுகிறது. இதில் சிவகங்கை மாவட்டத்தில் இந்த கிராமத்தில் துவக்கி இருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். அரசுக்கு பல்வேறு நிதி நெருக்கடிகள் இருந்தாலும் மக்கள் நிதி நெருக்கடியில் சிக்க கூடாது என்ற எண்ணத்தில் தினசரி திட்டங்களை அறிவித்து அதை நமது முதல்வர் செயல்படுத்தி வருகிறார். இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் பல்வேறுமக்கள் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது .அரசு அலுவலர்கள் மக்களை தேடிச் சென்று மக்களுக்கு உதவ வேண்டுமென்ற எண்ணத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் செயல்படுத்தப்பட்டு அது சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. தினசரி அந்த முகாம்களுக்கு 1000 பேர் மனு கொடுக்க வருகிறார்கள். அந்த மனுக்களில் பல்வேறு மனுக்கள் உடனடியாக தீர்வு காணப்படுகிறது. இவ்வாறு தீர்வு காணப்படாத மனுக்கள் 45 தினங்களில் தீர்வு காணும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதை போல் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அத்தகைய திட்டம் முலம் மாவட்டத்தில் முகாம் நடத்தி அனைத்து அரசு துறை அலுவலர்கள் பங்கேற்று மக்களுக்கு முழு அளவில் பயனுள்ள திட்டங்களாக நடைபெற்று வருகிறது. இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் இத்திட்டம் சிறப்பாக செயல்படுகிறது. பிற மாநில முதல்வர்கள் இத்திட்டங்களை நிறைவேற்றுவதை பார்த்து மற்ற மாநிலங்களிலும் செயல்படுத்தி வருகிறார்கள் இதில் முதல்வரின் காலை சிற்றுண்டி திட்டம் தற்போது இலங்கை கனடா மற்றும் வெளி நாடுகளில் வெளி மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதல்வர்அவர்கள் மக்களை தேடிப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். நிர்வாகம் யார் வேண்டுமானாலும் செய்யலாம். மக்களுக்காக மனிதநேயத்துடன் செயல்படும் திட்டம் மக்களுக்கு பயன் அளிக்க கூடியதாகும். அதை புரிந்து கொண்டு நமது முதல் வர் செயல்

பட்டு வருகிறார்.இத்தகைய மனிதநேய மக்கள் முதல்வரை இந்திய நாடுமட்டுமின்றி உலகமே பாராட்டுகிறது. முந்தைய அதி.மு.க.ஆட்சியில் இத்தகைய மக்கள் திட்டங்கள் செயல்படுத்தபடவில்லை. மகளிர்க்கு ஏராளமான சலுகைகளையும் திட்டங்களும் திராவிட மாடல் ஆட்சியில் நிறைவேற்ப்படுகிறது.

இந்தியாவின் சராசரி பொருளாதார வளர்ச்சி 5.9%ஆகும் தமிழகத்தில் தற்போது பொருளாதார வளர்ச்சி 12சதம்ஆகும் . கடந்த நான்கரை ஆண்டுகளில் முதல்வரின் தீவிர நடவடிக்கையால் 12% உயர்ந்துள்ளது. இது இரண்டு மடங்கு அதிகமாகும். .கல்வி வளர்ச்சி இந்தியாவில்27சதம் ஆகும். தமிழகம் 52% பெற்றுள்ளது. இரட்டிப்பு வளர்ச்சி தமிழக மாநிலம் பெற்று வருகிறது. தமிழகத்தில் 37 ஆயிரம் ரேஷன் கடைகள் உள்ளது. 2 கோடியே 25 லட்சம் பேர் குடும்ப அட்டை காரர்கள் உள்ளார்கள். இதில் ரேஷன் கடையில் தரமான பொருட்கள் வழங்க வேண்டும் என்று முதல்வர்அவர்கள் அறிவுறுத்திஉள்ளார்கள் விலையில்லா பொருட்கள், இலவசமாக தரப்படும் பொருட்கள் அனைத்தும் தரமாக வழங்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ளார்கள். ரேஷன் கடைக்கு வழங்கப்படும் அரிசி தரமற்றதாக இருந்தால் அதை திருப்பி அனுப்பப்பட்டு மீண்டும் நல்ல அரிசி வழங்கப்பட வேண்டும் என்று அறிவுரை வழங்கி உள்ளார் . சிறிய குறைகள் இருந்தாலும் அவைகளும் உடனடியாக தீர்க்கப்பட்டு வருகின்றது .ரேஷன் கடை களில் அரிசி பருப்பு எண்ணெய் வகைகள் மிகக்குறை வான விலைக்கு தரப்படுகிறது. வெளிக்கடைகளில் அரிசி பருப்பு விலைகள் எண்ணெய் விலைகள் அதிக அளவில் விற்கப்படுகிறது . அரிசி பருப்பு எண்ணெய் போன்ற குடிமைப் பொருட்கள் மிக குறைவான விலையில் தமிழகத்தில் வழங்கப்பட்டு வருகின்றது. இதற்கான நிதியினை தாராளமாக முதல்வர்அவர்கள் பொது வினியோகத் திட்டத்திற்கு வழங்கி உள்ளார் .இந்த பொதுவினியோக த்திட்டம் தமிழகத்தில் சிறப்பாக செயல்பட காரணம் முன்னாள் முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆவார் . இத்திட்டம் சிறப்பாக செயல்பட வேண்டும் என்று அவர் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தினார் . அதை தொடர்ந்து தலைவர் கலைஞர் வழியில் முதல்வர் தளபதி அவர்களும் இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். பல்வேறு அரசுத் துறைகள் சிறப்பாக செயல்படுகிறது.இதில் கூட்டுறவுத்துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. சமீபத்தில் டெல்லியில் கூட்டுறவுத்துறை அமைச்சர்கள் மாநாடு கூட்டுறவுத்துறை அமைச்சர், உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையில் நடைபெற்றது .இந்த மாநாட்டில் பல்வேறு மாநிலங்களில் இருந்து கூட்டுறவு துறை அமைச்சர்கள், அதிகாரிகள் பங்கேற்றார்கள் தமிழகத்திலிருந்து நானும் துறை செயலாளரும் விரிவாக தமிழகத்தில் கூட்டுறவு துறை செயல்படும் விதம், இதன் மூலம் மக்கள் அடையும் பயன்பாடுகள் பற்றி பேசினோம்.. எங்களது பேச்சை கவனித்த ஒன்றிய அமைச்சர் அமித்ஷா கூட்டுறவுத்துறை தமிழகத்தில் செயல்படுவது போல் மற்ற மாநிலங்களும் அதை பின்பற்ற வேண்டும் என்று பாராட்டி கூறினார் . ஒன்றிய அரசு நம்மை வஞ்சித்தாலும் நம்முடைய அரசு செயல்பாட்டினை பாராட்டுவது நமக்கு கிடைத்த ஒரு நற்சான்றிதழாகும். இதேபோல் வேறு மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர் உச்ச நீதிமன்றத்தில் கூட்டுறவு துறை செயல்பாடுகள் பற்றி பொது வழக்கு ஒன்றினை தொடர்ந்தார். அதை விசாரித்த உச்சநீதிமன்றம் தமிழகத்தில் கூட்டுறவு துறை சிறப்பாக செயல்படுகிறது. அதை மற்ற மாநிலங்கள் பின்பற்றி செயல்பட வேண்டும் என்று உத்தரவிட்டார்கள் . இத்தகைய பல்வேறு சான்றிதழ்களை சிறப்புகளை கூட்டுறவுத் துறை பெற்று வருகிறது. தமிழக முதல்வர் பதினைந்து தினங்களுக்கு முன் உடல்நலக்குறைவு ஏற்பட்டு அனுமதிக்கப்பட்ட போதும் உங்களுடன் ஸ்டாலின் மற்றும் பல்வேறு திட்டங்கள் செயல்பாடு குறித்து ஆய்வு செய்து வந்தார் .இந்த தாயுமான வர் திட்டத்தின் மூலம் 70 வயது நிறைவுற்ற முத்த குடிமகன்களுக்கு உணவு பொருட்கள் நேரில் சென்று அவர்களது வீட்டில் வழங்கப்படுகிறது இதே போல் மாற்றுத்திறனாளிகளுக்கும்வழங்கப்படுகிறது . அது இன்று முதல் மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படுகிறது. இதற்கு அரசுக்கு கூடுதலாக ரூபாய் 30 கோடி செலவு ஆகிறது. அதையும் தமிழக முதல்வர் அவர்கள் இந்த துறைக்கு வழங்கியுள்ளார். உணவுத்துறைக்கு 10500 கோடி ரூபாய் மானியம் தரப்படுகிறது. இதையும் முதல்வர் வழங்கி வருகிறார். இத்திட்டத்தின் மூலம் 21 லட்சத்தி 70454 பேர் பயன்படுகிறார்கள். சிவகங்கை மாவட்டத்தில் 33,294 பேர் குடும்ப அட்டைகாரர்கள் உள்ளார்கள். இதில் 65 690 பேர் பயன் அடைகிறார்கள். தேர்தலின்போது மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப் பட்டுள்ளது. இதுதவிர புதிய வாக்குறுதிகளும் நிறைவேற்றப்பட்டுள் ளது. பதவி ஏற்ற நாள்முதல் மக்களுக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து அதை செயல்படுத்தி வருகிறார்.. இத்தகைய முதல்வர் அவர்கள் தொடர்ந்து மக்களுக்கு பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் .மக்களும் தொடர்ந்து ஆதரவினை தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கூட்டுறவுத்துறை அதிகாரிகள் வழங்கப்படும் உணவுப் பொருட்களில் ஏதாவது குறைகள் இருந்தால் அது குறித்து உரிய அதிகாரிகளிடம் மக்கள் தெரிவிக்க வேண்டும். அத்தகைய குறைகள் உடனடியாக நீக்கப்படும். அரசு அதிகாரிகள் மக்களின் தேவை களை உணர்ந்து அதை நிறைவேற்றிடும் வகையில் பணியாற்ற வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கேஆர் பெரியகருப்பன் பேசினார். இணைப்பதிவாளர் பாபு நன்றி கூறினா.ர்.

இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் திருமலை முத்துராமலிங்கம் மாவட்ட விநியோக அலுவலர் ராஜா, வட்டாட்சியர் சிவராமன் ,மாவட்ட மகளீரணி அமைப்பாளர் பவானி கணேசன் மாவட்ட திமுக செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார்,அணி நிர்வாகிகள் ஜெயக்குமார், சோமசுந்தரம், ஆறுமுகம், புதூர் செல்வம், தொ.மு.ச முருகேசன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர்கள் கருப்பண்ணன் ,மாரி, அர்ஜுனன், உட்பட அரசு அதிகாரிகள் கிராம மக்கள் கலந்து கொண்டார்கள். தொடர்ந்து ஒக்கூர் புதூரில் பழனியப்பன்,ராமகிருஷ்ணன் வீட்டிற்கு அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் நேரில் சென்று அரிசி, பருப்பு, சர்க்கரை ஆகிய பொருட்களை வழங்கினார். தொடர்ந்து மாவட்டம் முழுவதும் வழங்கப்படும் உணவுப் பொருட்கள் உள்ள வேனை கொடியசைத்து அனுப்பி வைத்தார்.

சிவகங்கை மாவட்டம் கல்லல் கிழக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் தலைவர் கலைஞர் அவர்களின் 7வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு கல்லல் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் நா.நெடுஞ்செழியன் தலைமையில் நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.